## திராவிட இயக்க இதழ்கள் - முத்தாரம்



முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1956-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல், வெளிக்கொண்டு வரப்பட்ட இதழ் ‘முத்தாரம்’. இது மாத இதழாக மலர்ந்தது. “பன்முறைத் துவக்க முயற்சிகளில் அடியெடுத்து வைத்து, மேற்செல்ல இயலாமை குறித்து நாட்களைத் தள்ளிப் போட்டுக் கொண்டே நண்பர்களுக்கு மழுப்பல் விடைகளைப் பகர்ந்து வந்தேன், ‘விரைவில் வரும் வரும்’ என்று!”என முதல் இதழில் கலைஞர் அவர்கள் எழுதுகிறார்.

பின்னர், திருச்சி மாநாட்டில் ‘எப்போதய்யா முத்தாரம்?’ என்று எழுந்த கேள்வியைத் தொடர்ந்து, மாநாட்டை முடித்துக்கொண்டு சென்னை திரும்பியவுடனே அவர் ஆரம்பித்த இதழ்தான் இது. ஆங்கிலத்தில் வெளிவரும் ‘ரீடர்ஸ் டைஜஸ்ட்’ போன்ற இதழ்களின் தீவிர வாசகரான கலைஞர் அவர்கள், தமிழிலும் அது போன்ற இதழ்கள் வர வேண்டும் என்று விரும்பினார். அந்த விருப்பத்தின் விளைவுதான் ‘முத்தாரம்’.

கட்டுரை, கதை, நாடகம், கவிதை, சித்திரக் கதை ஆகியவற்றைத் தாங்கி வெளிவந்தது இந்த இதழ். ‘பெருங்கதை’ என்ற பிரிவில் உலக மொழிகளில் வெளிவந்த சிறந்த சிறுகதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு வெளியாகின. ஆங்கிலத்தில் இன்றளவும் பெரிதும் போற்றப்படும் ‘ஃப்ராங்கன்ஸ்டெய்ன்’ எனும் நாவலை, ‘பிரேத மனிதன்’ என்ற தலைப்பில், அதன் சாராம்சம் குன்றாமல் ஐந்து இதழ்களுக்கு தொடர் சித்திரக் கதையாக இதில் வெளிவந்துள்ளது. ஆக, ‘காமிக்ஸ்’, ‘கிராஃபிக் நாவல்’ போன்ற முயற்சிகளை அன்றே கலைஞர் முயன்று பார்த்திருக்கிறார்.

இந்த இதழ் குறித்த தகவல்களை வெளியிடும்போது, ‘ஆசிரியரின் இனம்’, ‘வெளியிடுவோரின் இனம்’ என்கிற இடங்களில் ‘திராவிடர்’ என்று அச்சிடப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. இந்த இதழுக்கு ‘முரசொலி’ மாறன் அவர்கள் வெளியீட்டாளராக இருந்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





லதா – வெங்கடேசன்

### தளபதி நடத்தி வைத்த மண விழா!

13-09-2010 அன்று, இன்றைய கழகத் தலைவர் அவர்கள் துணை முதலமைச்சராக இருந்த போது அவர் தலைமையில், அவருடைய இல்லத்தில் எனக்கும் என்னுடைய இணையர் லதா அவர்களுக்கும் இணையேற்பு விழா நடைபெற்றது. அப்போது நான், வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகர 9-வது வட்டப் பிரதிநிதியாக இருந்தேன். உடன் இன்றைய இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.காந்தி, அன்றைய குடியாத்தம் நகரச் செயலாளர் விவேகானந்தன், அன்றைய மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளரும் இன்றைய வேலூர் மாவட்டக் கழகச் செயலாளருமான ஏ.பி.நந்தகுமார் ஆகியோர் உள்ளனர்.

**– வெங்கடேசன், முன்னாள் வட்டப் பிரதிநிதி, வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கழகக் கொடி!

1949-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில்,“கழகம் தோற்றுவிக்கப்பட வேண்டும்” என்கிற எண்ணம் தோன்றியபோதே கொடி பற்றியும் முடிவு செய்தார், பேரறிஞர் அண்ணா. திராவிடர் கழகம் என்பதில், முன்னேற்றத்தை நுழைத்து ‘ர்’ -ஐ நீக்கி, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் பெயரினை உண்டாக்கியதைப் போலவே, கொடியையும் திராவிடர் கழக கொடியிலிருந்தே முடிவு செய்தார். கொடியின் அளவு, கருப்பும், சிவப்பும் நீளஅகலத்தில் 3 : 2 என்கிற விகிதத்தில் இருக்க வேண்டும் என உருவாக்கினார்.

# மாநாடு

ர.பிரகாசு **29**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**



# பெரியாரின் அறைகூவல்!

*1971-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நாடாளுமன்றத்துடன் சேர்த்து தமிழ்நாடு சட்டமன்றத்துக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அண்ணா மறைந்த பிறகு நடந்த முதல் சட்டமன்றத் தேர்தல். ஜனவரி 23, 24 ஆகிய 2 நாட்கள் சென்னை, அசோக் நகரில் சிறப்பு மாநாட்டைக் கூட்டி வேட்பாளர்களை அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அதேநாளில் சேலத்தில் மூட நம்பிக்கை ஒழிப்பு மாநாட்டைக் கூட்டினார் பெரியார். 3 கிலோ மீட்டர் தொலைவுக்கு 50,000 கருஞ்சட்டைகளின் மிடுக்கான அணிவகுப்பு சாலையின் இருமங்கிலும் திரண்டிருந்த 2 லட்சம் பேரை மிரள வைத்தது.*

*தீமிதித்தல், அலகுக் குத்திக்கொள்ளுதல் உள்ளிட்ட மூடநம்பிக்கைகளைப் பேரணியில் மக்களுக்கு விளக்கினர். 10 அடி உயர ‘ராவண லீலா’ காட்சியை 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கண்டு களித்தனர். சேலம் ரத்தினசாமி பந்தல், போஸ் அரங்கத்தில் மாநாடு கூடியது. மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் டி.வி. சொக்கப்பா அனைவரையும் வரவேற்றார். ஜி.டி.நாயுடு மாநாட்டைத் திறந்துவைத்தார். தலைமையுரையாற்றிய பெரியார், “மூடநம்பிக்கை என்பது observation and experiment (கூர்நோக்குதல் மற்றும் சோதனை) இரண்டுக்குமே பொருந்தாதது” என்று மூடநம்பிக்கைகளைத் தோலுரித்து, அவற்றைச் சமூகத்தில் இருந்து அகற்றியே தீர வேண்டுமென்று தீர்க்கத்துடன் உரைத்தார்.*

*“உச்சநீதிமன்றத்தை எடுக்க வேண்டும், மத உணர்ச்சியைப் புண்படுத்துவதாகக் கூறும் இ.பி.கோ சட்டத்தை நீக்க வேண்டும், கடவுளுக்கும் மதத்துக்கும் அரசு பாதுகாப்பு தரக்கூடாது, பார்ப்பன பத்திரிகைகளைப் புறக்கணிக்க வேண்டும்” எனப் பல அதிரடித் தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.*

*இதில் ஒரு தீர்மானத்தை மட்டும் திரித்து வெளியிட்டதாக, ‘தி இந்து’, ‘தினமணி’, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஊடகங்கள் மீது வழக்கு தொடுத்தார் பெரியார். 01.02.1971 அன்று சம்பந்தப்பட்ட ஊடகங்களுக்கு நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது. வழக்கு விசாரணை நடைபெற்றபோதே மீண்டும் அதே வகையில் ‘தி இந்து’ ஊடகம் செய்தி வெளியிட்டது. அதற்காக, 16.03.1971 அன்று நீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பும் கோரியது.*

*மாநாட்டின் தீர்மானத்தைப் போல ஊர்வலமும் விவாதத்தை ஏற்படுத்தியது. ஊர்வலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, திரண்டிருந்த ஜன சங்கத்தைச் சேர்ந்த 40, 50 பேர், செருப்பைக் கழற்றி பெரியாரை நோக்கி வீசினர். அந்தச் செருப்பு ஊர்வலத்தில் சென்றவர்கள் மீது விழுந்தது. கூட்டத்தில் விழுந்த செருப்பை எடுத்தவர்கள், ஜன சங்கத்தினரை நோக்கித் திருப்பி வீச, அது ராமர் படத்தின் மீது விழுந்தது. ஆனால், திராவிடர் கழகத்தினர் பேரணியில் திட்டமிட்டு, ராமரைச் செருப்பால் அடித்ததாக அவதூறு கிளப்பப்பட்டது. இத்தகைய சர்ச்சைகளால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தேர்தலில் கடும் நெருக்கடி ஏற்படும் என்று எதிரிகள் புளகாங்கிதம் அடைந்திருந்தனர். ஆனால், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 184 தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் வென்று, பெரியார் தலைமையிலேயே பதவியேற்றார் முத்தமிழறிஞர் கலைஞர்.*

*கலைஞரை கட்சியின் சர்வாதிகாரியாக்க வேண்டுமென்று அறைகூவல் விடுத்தார் பெரியார். அந்த அறைகூவல், அடுத்த அரை நூற்றாண்டுக்கு எதிரொலித்தது. தி.மு. கழகத்தின் சர்வ அதிகாரம் மிக்க தலைவராகவே நிறைந்தார் கலைஞர்.*


**அந்த அறைகூவல், அடுத்த அரை நூற்றாண்டுக்கு எதிரொலித்தது. தி.மு. கழகத்தின் சர்வ அதிகாரம் மிக்க தலைவராகவே நிறைந்தார் கலைஞர்.**

**...கூட்டம் திரளும்**

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ் **29**

**“புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்” என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**



# நாத்திக மரபின் தொடர்ச்சி...

*இந்திய பொதுவுடமை இயக்கத் தலைவர்களில் ஒருவரும், தமிழ்நாடு பொதுவுடமை இயக்க முன்னோடியுமான ஏ.எஸ்.கே அவர்கள், பெரியாரின் மறைவுக்குப் பின், பெரியார் குறித்து எழுதிய நூல்தான் ‘பகுத்தறிவின் சிகரம் பெரியார் ஈ.வெ.ரா’ என்ற நூல். சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலருக்கு இந்நூலைச் சமர்ப்பித்துள்ளார் ஏ.எஸ்.கே.*

*சுதந்திரப் போராட்ட வீரர், இடதுசாரித் தொழிற்சங்கத் தலைவர் என அவரது வாழ்க்கை காலத்தில் அம்பேத்கர், பெரியார் எனச் சமூக விடுதலை பேசிய தலைவர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தவர்.*

*ஏ.எஸ்.கிருஷ்ணமாச்சாரி அய்யங்கார் என்கிற தன் பெயரை, பின்னாட்களில் சாதிப் பட்டம் நீக்கி விட்டு, ஏ.எஸ்.கே என்று சுருக்கிக்கொண்டவர். இந்து உயர் சாதிக் குடும்பமாக இருந்தாலும், அவரது குடும்பம் சீர்திருத்தக் கருத்துகளை உள்வாங்கிக் கொண்ட குடும்பமாக, சாதி மறுப்புத் திருமணங்களை ஏற்று கொண்டவர்களாக இருந்தனர் என்பதிலிருந்தே அவரது சமூகச் செயல்பாடுகளை அறியலாம்.*

*தொழிற்சங்கத் தலைவர் பதவியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் முக்கிய பொறுப்பையும் வகித்த இவர்,1938-லேயே பெரியாருடன் நல்ல நட்புறவில் இருந்தவர் என்பதை, இந்த நூலின் அறிமுகத்திலேயே ஏ.எஸ்.கே குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த நூல், இந்திய தத்துவ மரபில் பெரியாரின் நாத்திகத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. இந்திய தத்துவத்தின் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள அவசியம் உதவும் நூல் இது. ‘எதிர் வெளியீடு’ பதிப்பகத்தார் இந்நூலை வெளியிட்டுள்ளனர்.*

*‘இந்தியாவில் மட்டும்தான் தத்துவம் என்பது எந்த ஒரு கேள்விக்கும் உட்படுத்தப் படாமல் இருந்து வந்துள்ளது. இதற்குக் காரணம் இந்தியாவில் தத்துவமும்- சமயமும் ஒன்றிணைந்து இருக்கின்றன. தத்துவம் என்பது அறிவு செயல்பாடு, சமயத்திற்கு அத்தகைய தேவை இல்லை. எனவே தத்துவத்தோடு சமயம் ஒன்றிணையும்போது அறிவின் செயல்பாடு தடைப்பட்டு, வெறும் உணர்வுகள் தலை தூக்குகின்றன. இதனாலயே தத்துவத்தை மீறிய ஆன்மிக உணர்வு முதன்மை பெறுகிறது.*

*நாத்திகப் பண்புகளைக் கொண்ட மீமாம்சம், சாங்கியம், சார்வாகம், லோகாயதம் போன்றவை எல்லாம் கூட பிற்காலத்தில் நீர்த்துப் போனதற்கு அவை கொண்டிருந்த சமயக் கூறுகளே காரணம்’ என்கிறார் ஏ.எஸ்.கே.*

*அறிவை முதன்மையாகக் கொண்ட மதங்களான பௌத்தம், சமணம் போன்றவை எல்லாம் நாத்திக மரபின் எடுத்துக்காட்டுகள் எனக்கூறும் ஏ.எஸ்.கே, புத்தர் ஒரு பொருள் முதல்வாதி என்கிறார்.*

*‘அறியாமையே அனைத்துத் துன்பத்திற்குக் காரணம்’ என்று அவர் சொன்னது இதன் அடிப்படையில்தான். ஆன்மா, ப்ரம்மம் போன்ற போலிச் சொற்களை நம்பி மதியை இழக்காமல், சிந்திக்கச் சொன்னவர் புத்தர். இத்தகைய நாத்திக (பொருள் முதல்வாத) மரபின் தொடர்ச்சியாக பெரியார் இருக்கிறார் என்றும் ஏ.எஸ்.கே நிறுவுகிறார்.*

*இந்நூலில் பெரியாரின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு இடம்பெற்றுள்ளது, பல புதிய சுவாரசியமான தகவல்களும் இடம்பெற்றுள்ளன. இந்திய தத்துவத்தின் சுருக்கமான அறிமுகமும் இடம்பெற்றுள்ளது.*

*1974-இல் இப்படி ஒரு புத்தகம் வெளிவந்துள்ளது என்பதே வியப்பை ஏற்படுத்துகிறது. பெரியாரின் பகுத்தறிவு, நாத்திகம் குறித்து அறிந்து கொள்ள விரும்பும் அனைவரும் தவறாமல் வாசிக்க வேண்டும்.*


**ஆன்மா, ப்ரம்மம் போன்ற போலிச் சொற்களை நம்பி மதியை இழக்காமல், சிந்திக்கச் சொன்னவர் புத்தர்.**

**...வாசிப்போம்.**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**603**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.